www.Padasalai.Net www.CBSEtips.in

KANCHIPURAM DT

# காலாண்டுப் பொதுத்தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - அ

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
அ) நிறுமம் ஆ) அரசு
இ) சிறிய அளவிலான தனி ஆள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுமங்கள்

2. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
அ) மொத்தக் கடனாளிகள் கணக்கு ஆ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

3. உரிமையாளரின் சொத்துகள் ₹85,000 மற்றும் பொறுப்புகள் ₹12,000 எனில் அவருடைய முதல் தொகை
அ) ₹85,000 ஆ) ₹1,06,000 இ) ₹21,000 ஈ) ₹64,000

4. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹30,000, பெற்ற ரொக்கம் ₹1,00,000, கடன் விற்பனை ₹90,000, கடனாளிகள் இறுதி இருப்பு?
அ) ₹30,000 ஆ) ₹1,30,000 இ) ₹40,000 ஈ) ₹20,000

5. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு
அ) பெயரளவு கணக்கு ஆ) சொத்து கணக்கு
இ) ஆள் சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள் சார் கணக்கு

6. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
அ) பெயரளவுக் கணக்கு ஆ) சொத்து கணக்கு
இ) ஆள் சார் கணக்கு ஈ) பிரதிநிதித்துவ ஆள் சார் கணக்கு

7. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது. ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் ஈ) அறைகலன் விற்ற தொகை

8. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
அ) வருவாயின வரவு ஆ) முதலின வரவு
இ) வருவாயின செலவு ஈ) முதலின செலவு

9. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

10. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக்கொள்ளும் போது அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள்
இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

11. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
அ) சம்பளம் ஆ) கழிவு
இ) கடன் மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

12. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
அ) நற்பெயர் ஒரு புலனாகச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயர் வாங்க முடியாது

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



13. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்.
அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம்
ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

14. சராசரி இலாபம் ₹25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது உயர் இலாபம்
அ) ₹25,000 ஆ) ₹ 5,000 இ) ₹10,000 ஈ) ₹15,000

15. மறுமதிப்பீட்டில் சொத்துக்களின் மதிப்பு உயர்வது
அ) ஆதாயம் ஆ) நட்டம்
இ) செலவு ஈ) இவற்றுள் எதுவுமில்லை

16. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம்
இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

17. ஜேம்ஸ் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் சுனில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.
அ) 1 : 3 ஆ) 3 : 1 இ) 5 : 3 ஈ) 3 : 5

18. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின்போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
இ) ஆதாய விகிதம் ஈ) தியாக விகிதம்

19. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாத போது, அது மாற்றப்படும் கணக்கு
அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

20. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4 : 2 : 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
அ) 4 : 3 ஆ) 3 : 4 இ) 2 : 1 ஈ) 1 : 2

## பகுதி - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14**

21. நிலை அறிக்கை என்றால் என்ன?
22. உயில் கொடை என்றால் என்ன?
23. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ளவேண்டிய குறிப்பேட்டு பதிவு என்ன?
24. உயர் இலாபம் என்றால் என்ன?
25. பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடவும்.

| *விவரம்* | ₹ |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 இல் முதல் | 1,60,000 |
| 2019 மார்ச் 31 இல் முதல் | 1,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 25,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



26. 2018 ஆம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ₹20,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என விதிக்கப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்றைய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

27. சந்தோஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ₹ |
|---|---|
| பிப்ரவரி 1 | 2,000 |
| மே 1 | 10,000 |
| ஜூலை 1 | 4,000 |
| அக்டோபர் 1 | 6,000 |

28. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இலாபங்கள் பின்வருமாறு :
2014 : ₹10,000; 2015 : ₹11,000 ; 2016 : ₹12,000 ; 2017 : ₹13,000 ; 2018 : ₹14,000
சராசரி இலாபம் கணக்கிடவும்.

29. மாலா மற்றும் விமலா எனும் கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2017 அன்று வர்ஷினி என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அவர் சேர்ந்த நாளில் நிறுவன ஏடுகளில் காப்பு நிதி ₹50,000 எனக் காட்டியது. காப்பு நிதியை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

30. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள்கள் | 6,500 |
| 31.3.2019 அன்று எழுதுபொருள்கள் இருப்பு | 2,200 |

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21**

31. முழுமை பெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?

32. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

33. நிலைமுதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

34. சாந்தி என்பவரின் 2018 டிசம்பர் 31ஆம் நாளைய இருப்புகள் பின்வருமாறு :

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 | பற்பல கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 4,000 | சரக்கிருப்பு | 45,000 |
| இயந்திரம் | 60,000 | கடனாளிகள் | 70,000 |
| அறைகலன் | 10,000 | ரொக்கம் | 4,000 |

2018 டிசம்பர் 31ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரித்து, அந்நாளைய முதலைக் கணக்கிடவும்.

35. பின்வரும் விவரங்களிலிருந்து கடன் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் | 50,000 |
| வெளித்திருப்பம் | 6,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,60,000 |
| 2019 மார்ச் 31 அன்று கடனீந்தோர் | 70,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



36. அமீரா மற்றும் சமீரா எனும் கூட்டாளிகள் 3 : 1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று அவர்களுடைய முதல் அமீரா ₹70,000, சமீரா ₹60,000 மற்றும் அவர்கள் நடப்புக் கணக்குகள் முறையே ₹10,000 மற்றும் ₹5,000 என வரவிருப்பைக் காட்டியது. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிடவும் மற்றும் அதற்கான குறிப்பேடு பதிவுகளையும் தரவும்.

37. பிரவீணா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7:3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக்கொண்டனர். பிரவீணா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5:2:3. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

38. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு:
2015 - ₹15,000 ; 2016 - ₹17,000 ; 2017 - ₹6,000 (நட்டம்) 2018 - ₹14,000
4 ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

39. பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையைக் கண்டறியவும்.

| *விவரம்* | ₹ |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வராக் கடன் | 15,000 |
| 2018 டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

40. ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.

| *விவரம்* | *1.1.2018 (₹)* | *31.12.2018 (₹)* |
|---|---|---|
| சந்தா பெற வேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 4,000 | 7,000 |
| 2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹45,000 | | |

பகுதி – ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. அ) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

| *விவரம்* | *1.1.2018 (₹)* | *31.12.2018 (₹)* |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹2,500 எடுத்துக் கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

*(அல்லது)*

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிருந்து 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| *விவரம்* | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.1.2018) | 20,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 |
| முதலீடுகள் செய்தது | 80,000 | அறைகலன் விற்றது | 5,000 |
| மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 | பொதுச் செலவுகள் | 7,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| தணிக்கை கட்டணம் செலுத்தியது | 2,000 | சந்தா பெற்றது | 10,000 |

42\. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| *விவரம்* | ₹ |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,50,000 |
| 2017 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 40,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்குரிய ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 40,000 |
| 2018, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| 2018, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |

***(அல்லது)***

ஆ) ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017 ஏப்ரல் 1 அன்று வான்மதி புதிய கூட்டாளியாகச் சேர்த்த பின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிகட்டுதல்கள் செய்யப்படவேண்டும்.

i) வளாகத்தின் மதிப்பு ₹60,000 அதிகரிக்கப்பட்டது.

ii) சரக்கிருப்பு மீது ₹5,000, அறைகலன் மீது ₹2,000, இயந்திரம் மீது ₹2,500 தேய்மானம் நீக்கப்படவேண்டும்.

iii) கொடுபடவேண்டிய பொறுப்பு ₹500 உருவாக்கப்படவேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினை தயார் செய்யவும்.

43\. அ) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தில் மஞ்சு, சாரு மற்றும் லாவண்யா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018 மார்ச் 31-ஆம் நாளைய அவர்களுடைய இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு :

| *பொறுப்புகள்* | ₹ | ₹ | *சொத்துகள்* | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கட்டடம் | 1,00,000 |
| மஞ்சு | 70,000 | | அறைகலன் | 80,000 |
| சாரு | 70,000 | | சரக்கிருப்பு | 60,000 |
| லாவண்யா | 70,000 | 2,10,000 | கடனாளிகள் | 40,000 |
| பற்பல கடனீந்தோர் | | 40,000 | கை ரொக்கம் | 20,000 |
| இலாப நட்டக் கணக்கு | | 50,000 | | |
| | | 3,00,000 | | 3,00,000 |

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பின்வரும் சரிக்கட்டுதல்களுக்கு உட்பட்டு மஞ்சு என்பவர் 31.03.2018 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) சரக்கிருப்பின் மதிப்பில் ₹10,000 குறைக்க வேண்டும்.

ii) ஐயக்கடன் ஒதுக்கு ₹3,000 உருவாக்க வேண்டும்.

iii) கட்டடத்தில் ₹28,000 மதிப்பேற்றம் செய்ய வேண்டும்.

iv) மஞ்சுவுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் கூட்டாளிகளின் முதல் கணக்கினைத் தயார் செய்யவும்.

*(அல்லது)*

ஆ) இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

44. அ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கை ரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| உயில் கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது (ஏட்டு மதிப்பு ₹17,000) | 16,000 | இருப்பு கீ/இ கை ரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

*(அல்லது)*

ஆ) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019 மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ₹30,000 முதலுடன் எதிர்கால இலாபப பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



i) சரக்கிருப்பின் மதிப்பு ₹5,000 குறைக்கப்பட வேண்டும்.

ii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹3,000 உருவாக்கப்பட வேண்டும்.

iii) கட்டடம் ₹20,000 மதிப்பேற்றம் செய்யப்படவேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

45. அ) கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கை தயார் செய்யவும்.

| *விவரம்* | ₹ | ₹ | *விவரம்* | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கை ரொக்கம் (1.4.2018) | | 1,000 | நீர் மற்றும் மின்சார கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பிற்காக | | | விளையாட்டுப்போட்டி செலவுகள் | 2,600 |
| கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டு பொருள்கள் வாங்கியது | 1,900 |
| சந்தா பெற்றது : | | | விளையாட்டு போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| முந்தைய ஆண்டு | 500 | | உயில் கொடைப் பெற்றது | 2,000 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | ரொக்க இருப்பு (31.3.2019) | 300 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | அரங்கம் அமைப்பதற்காக | |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | பெற்ற நன்கொடை | 2,000 |
| கடன் மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | | |

*(அல்லது)*

ஆ) ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

i) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018-இன் இலாபங்கள் முறையே ₹1,75,000, ₹1,50,000 மற்றும் ₹2,00,000

ii) 2016ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹45,000 சேர்ந்துள்ளது.

iii) 2017 ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

46. அ) ஆனந்த் மற்றும் நாராயணன் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ₹50,000 மற்றும் ₹30,000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது.

i) முதல் மீது வட்டி ஆண்டிற்கு 6% அனுமதிக்கவேண்டும்.

ii) ஆனந்த் மற்றும் நாராயணனுக்கு விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ₹1,000 மற்றும் ₹800.

iii) முதல் மீது வட்டி மற்றும் வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ₹35,000.

கூட்டாளிகளுடைய முதல், மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். மற்றும் 2018 டிசம்பர் 31ஆம் நாளைய் இலாப நட்டப் பகிர்வு கணக்கையும் தயார் செய்யவும்.

*(அல்லது)*

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

i) பயன்படுத்தப்பட்ட முதல் ₹1,20,000

ii) சாதாரண இலாப விகிதம் 20%

iii) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம்
2014 - ₹30,000 ; 2015 - ₹32,000 ; 2016 - ₹35,000 ; 2017 - ₹37,000 ; 2018 - ₹40,000

iv) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹2,800.

47. அ) பின்வரும் தகவல்களிலிருந்து மன்னன் மற்றும் சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும்போது தயாரிக்கவும்.

| *விவரம்* | *மன்னன் (₹)* | *சேவகன் (₹)* |
|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 2,00,000 | 1,75,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 40,000 | 35,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 1,000 | 500 |
| 2018 ஆம் ஆண்டின் இலாபப்பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | --- |
| கழிவு | --- | 2,500 |

*(அல்லது)*

ஆ) ரோஜா, நீலா மற்றும் கனகா என்ற கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று ரோஜா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின் போது கீழ்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டன.

i) கட்டடத்தின் மதிப்பில் ₹30,000 அதிகரிக்க வேண்டும்.

ii) சரக்கிருப்பு மதிப்பில் ₹5,000 மற்றும் அறைகலன் மதிப்பில் ₹12,000 குறைக்க வேண்டும்.

iii) கொடுபடா பொறுப்புகள் ₹1,000 உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

******

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.CBSEtips.in

காஞ்சிபுரம், கடலூர், தேனி, திருவாரூர், மயிலாடுதுறை, திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள்

## காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## 12 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். | | 20 X 1 = 20 |
|---|---|---|
| 1 | இ | சிறிய அளவிலான தனியாள் வணிகம் |
| 2 | அ | மொத்தக் கடனாளிகள் கணக்கு |
| 3 | - | ₹. 73,000 |
| 4 | ஈ | ₹. 20,000 |
| 5 | ஆ | சொத்து கணக்கு |
| 6 | அ | பெயரளவுக் கணக்கு |
| 7 | ஈ | அறைகலன் விற்ற தொகை |
| 8 | ஆ | முதலின வரவு |
| 9 | அ | வழங்கப்படுவதில்லை |
| 10 | ஆ | 6 மாதங்கள் |
| 11 | இ | கடன் மீது வட்டி |
| 12 | அ | நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து |
| 13 | இ | சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம் |
| 14 | இ | ₹. 10,000 |
| 15 | அ | ஆதாயம் |
| 16 | ஆ | தியாக விகிதம் |
| 17 | இ | 5 : 3 |
| 18 | ஆ | பழைய இலாபப் பகிர்வு விகிதம் |
| 19 | இ | விலகும் கூட்டாளியின் கடன் க/கு |
| 20 | இ | 2 : 1 |

### பகுதி - II

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. நிலைஅறிக்கை என்றால் என்ன?

- நிலை அறிக்கை என்பது, ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக் காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.

22. உயில்கொடை என்றால் என்ன?

- ஒரு இலாப நோக்கற்ற அமைப்புக்கு, உயில் மூலமாக அளிக்கப்படும் பரிசு உயில்கொடை ஆகும்.



23. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க, மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?

குறிப்பேட்டு பதிவு

| நாள் | விவரம் | பே.பே. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | முதல் மீது வட்டி க/கு ப<br>கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு | | xxx | xxx |

24. உயர் இலாபம் என்றால் என்ன?

- ஒரு வியாபாரத்தின் உயர் இலாபம் என்பது, சாதாரண இலாபத்தைவிட கூடுதலாக உள்ள சராசரி இலாபம் ஆகும்.

25. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் ( 2019, மார்ச் 31) | 1,50,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 30,000 |
| | 1,80,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 25,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 1,55,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஏப்ரல் 1 ) | 1,60,000 |
| அவ்வாண்டின் நட்டம் | (-) 5,000 |

( அல்லது )

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இறுதி முதல் | 1,50,000 | தொடக்க முதல் | 1,60000 |
| எடுப்புகள் | 30,000 | கூடுதல் முதல் | 25,000 |
| நட்டம் | 5,000 | இலாபம் | ---- |
| | 1,85,000 | | 1,85,000 |

∴ நட்டம் ₹. 5,000

26. எடுப்புகள் மீது வட்டி = எடுப்புத் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

$= ₹. 20,000 \times \frac{10}{100} \times \frac{6}{12}$

எடுப்புகள் மீது வட்டி = ₹. 1,000



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

27. எடுப்புகள் மீது வட்டி = எடுப்புத் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

பிப்ரவரி 1 இல் எடுப்பு = ₹. 2,000 x $\frac{6}{100}$ x $\frac{11}{12}$ = ₹. 110

மே 1 இல் எடுப்பு = ₹. 10,000 x $\frac{6}{100}$ x $\frac{8}{12}$ = ₹. 400

ஜூலை 1 இல் எடுப்பு = ₹. 4,000 x $\frac{6}{100}$ x $\frac{6}{12}$ = ₹. 120

அக்டோபர் 1 இல் எடுப்பு = ₹. 6,000 x $\frac{6}{100}$ x $\frac{3}{12}$ = ₹. 90

எடுப்புகள் மீது வட்டி = ₹. 720

28.

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{10,000+11,000+12,000+13,000+14,000}{5} = \frac{60,000}{5}$ = ₹.12,000

29.

குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே.பே. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 மார்ச் 31 | பொதுகாப்பு க/கு ப<br>மாலா முதல் க/கு ( 50,000 x $^3/_5$)<br>அனிதா முதல் க/கு ( 50,000 x $^2/_5$ )<br>( பொதுகாப்பு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாபவிகிதத்தில் மாற்றப்பட்டது ) | | 50,000 | <br>30,000<br>20,000 |

30. சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

ப வ

| செலவுகள் | தொகை ₹. | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| எழுதுபொருள்கள் பயன்படுத்தியது : | | | | |
| தொடக்க இருப்பு | 2,600 | | | |
| கூட்டுக : கொள்முதல் | 6,500 | | | |
| | 9,100 | | | |
| கழிக்க : இறுதி இருப்பு | 2,200 | 6,900 | | |





## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. முழுமைபெறா பதிவேடுகளின் இயல்புகள் யாவை?

1) தன்மை:
   - இது நடவடிக்கைகளை அறிவியல் தன்மையற்ற மற்றும் ஒழுங்கற்ற முறையில் பதிவு செய்யும் ஒரு முறையாகும்.
   - இதில் கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கியல் தரநிலைகள் முறையாகப் பின்பற்றப்படுவது இல்லை.

2) பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள்:
   - பொதுவாக, ரொக்கம் மற்றும் ஆள்சார்கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப்படுகின்றன.
   - சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை.

3) சீரற்றத் தன்மை:
   - பல்வேறு நிறுவனங்களுக்கிடையில், நடவடிக்கைகளை பதிவு செய்வதில் சீரற்றத் தன்மை காணப்படுகிறது.

4) பொருந்தும் தன்மை:
   - கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பின்பற்ற, சட்டப்படியான கடமையுள்ள நிறுவனங்கள் அல்லாத பிறநிறுவனங்கள், முழுமைபெறா பதிவேடுகளைப் பராமரிக்கலாம்.

32. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

| அடிப்படை | பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு | வருவாய் மற்றும் செலவினக் கணக்கு |
|---|---|---|
| நோக்கம் | இது, ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் அறிவதற்கு தயாரிக்கப்படுகிறது | இது உபரி அல்லது பற்றாக்குறை குறித்து அறிந்துகொள்ள தயாரிக்கப்படுகிறது |
| கணக்கின் தன்மை | இது, ஒரு சொத்துக் கணக்காகும். | இது, ஒரு பெயரளவுக் கணக்காகும். |
| கணக்கியலின் அடிப்படை | இது, ரொக்க அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது | இது, நிகழ்வு அடிப்படையிலான கணக்கியலை அடிப்படையாகக் கொண்டது |
| தொடக்கம் மற்றும் இறுதி இருப்பு | இது, தொடக்க ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு தொடங்கப்பட்டு, இறுதி ரொக்கம் மற்றும் வங்கி இருப்புகளைக் கொண்டு முடிவடைகிறது. | இங்கு தொடக்க இருப்பு என்பது கிடையாது. இது உபரி அல்லது பற்றாக்குறையுடன் முடிவடைகிறது |
| நடவடிக்கையின் தன்மைகள் | இது வருவாயினம் அல்லது முதலினம் என்ற வேறுபாடு இல்லாமல், அனைத்துப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களைக் | இது வருவாயின நடவடிக்கைகளை மட்டுமே, அதாவது வருவாயினச் செலவுகள் மற்றும் வருவாயின வரவுகள் மட்டுமே கொண்டிருக்கும். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | கொண்டிருக்கும் | |
|---|---|---|
| காலம் | நடப்பு ஆண்டில் மேற்கொண்ட அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் ரொக்கச் செலுத்தல்கள், அவை கடந்து ஆண்டு, நடப்பு ஆண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டிற்குரியதாக இருந்தாலும், இங்கு பதியப் படுகின்றன. | நடப்பு ஆண்டிற்குரிய நடவடிக்கைகள் மட்டும் இது கொண்டிருக்கும். |

33. **நிலைமுதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | நிலை முதல் | மாறுபடும் முதல் |
|---|---|---|
| 1. கணக்குகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு கூட்டாளிக்கும் இரண்டு கணக்குகள் அதாவது, முதல் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு பராமரிக்கப்படுகின்றன. | ஒவ்வொரு கூட்டாளிக்கும் ஒரே ஒரு கணக்கு அதாவது, முதல் கணக்கு மட்டும் பராமரிக்கப்படுகின்றன. |
| 2. முதல் தொகையில் மாற்றம் | கூடுதல் முதல் கொண்டு வரும்போது அல்லது முதல் தொகையை நிரந்தரமாக திரும்ப எடுக்கும் போது தவிர, மற்ற நேரங்களில் முதல் தொகை வழக்கமாக மாறாமல், நிலையாக இருக்கும். | முதல் தொகை பருவந்தோறும் மாறிக்கொண்டே இருக்கும் |
| 3. இறுதி இருப்பு | முதல் கணக்கு எப்பொழுதும் வரவு இருப்பையே காட்டும். ஆனால், நடப்புக் கணக்குகள் பற்று இருப்பையோ அல்லது வரவு இருப்பையோ காட்டும் | முதல் கணக்குகள் பொதுவாக வரவு இருப்பையே காட்டும். இது பற்றிருப்பையும் கூட காட்டலாம். |
| 4. சரிக்கட்டுதல்கள் | கூட்டாளிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சரிக்கட்டுதல்களும் நடப்புக் கணக்கில் பதியப்படும் | அனைத்து சரிக்கட்டுதல்களும் முதல் கணக்கில் பதிவு செய்யப்படும் |

34. <u>சாந்தி என்பவரின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய நிலையறிக்கை</u>

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 4,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| பற்பல கடனீந்தோர் | 25,000 | இயந்திரம் | 60,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 1,66,000 | அறைகலன் | 10,000 |
| | | சரக்கிருப்பு | 45,000 |
| | | கடனாளிகள் | 70,000 |
| | | ரொக்கம் | 4,000 |
| | 1,95,000 | | 1,95,000 |





35. ப <u>மொத்த கடனீந்தோர் கணக்கு</u> வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| ரொக்க க/கு ( அளித்தது ) | 1,60,000 | இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 50,000 |
| வெளித் திருப்பம் க/கு | 6,000 | கொள்முதல் க/கு ( கடன்) ( இருப்பு கட்டும் தொகை) | 1,86,000 |
| இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 70,000 | | |
| | 2,36,000 | | 2,36,000 |

∴ **கடன் கொள்முதல் ₹. 1,86,000**

36. முதல் மீது வட்டி = முதல் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

**அமீரா முதல் மீது வட்டி** = ₹. 70,000 x $\frac{5}{100}$ = ₹. 3,500

**சமீரா முதல் மீது வட்டி** = ₹. 60,000 x $\frac{5}{100}$ = ₹. 3,000

<u>குறிப்பு</u> : முதல் மீது வட்டி கணக்கிடும்போது நடப்புக் கணக்கின் இருப்புகளை எடுத்துக்கொள்ளக் கூடாது

<u>குறிப்பேட்டுப் பதிவு</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2019 மார்ச் 31 | முதல் மீது வட்டி க/கு ப | | 6,500 | |
| | அமீரா நடப்பு க/கு | | | 3,500 |
| | சமீரா நடப்பு க/கு | | | 3,000 |
| | ( முதல் மீது வட்டி வழங்கியது ) | | | |
| ” | இலாப நட்ட பகிர்வு க/கு ப | | 6,500 | |
| | முதல் மீதான வட்டி க/கு | | | 6,500 |
| | ( முதல் மீது வட்டி கணக்கை முடித்தது ) | | | |

37. பிரவீணா மற்றும் தான்யா அவர்களின் பழைய பங்கு = 7 : 3 அதாவது, $\frac{7}{10} : \frac{3}{10}$

பிரவீணா தான்யா மற்றும் மாலினியின் புதிய இலாப பங்கு = 5 : 2 : 3

அதாவது = $\frac{5}{10} : \frac{2}{10} : \frac{3}{10}$

**தியாகப் பங்கு = பழைய பங்கு - புதிய பங்கு**

**பிரவீணா** = $\frac{7}{10} - \frac{5}{10} = \frac{7-5}{10} = \frac{2}{10}$

**தான்யா** = $\frac{3}{10} - \frac{2}{10} = \frac{3-2}{10} = \frac{1}{10}$

**ஆகையால், பிரவீணா மற்றும் தான்யா ஆகியோரின் தியாகப் பங்கு** = $\frac{2}{10} : \frac{1}{10}$

∴ **தியாக விகிதம் = 2 : 1**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

38. சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{15,000+17,000-6,000+14,000}{4} = \frac{40,000}{4} = ₹.10,000$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 10,000 x 5 = ₹.50,000

39. ப மொத்த கடனாளி கணக்கு வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 1,30,000 | ரொக்க க/கு ( பெற்றது ) | 4,20,000 |
| விற்பனை க/கு ( கடன் ) ( இருப்பு கட்டும் தொகை) | 5,40,000 | விற்பனை திருப்ப க/கு | 35,000 |
| | | வாராகடன் க/கு | 15,000 |
| | | இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 2,00,000 |
| | 6,70,000 | | 6,70,000 |

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

= ₹. 4,60,000 + ₹. 5,40,000 = ₹. 10,00,000

40.

2018 ஆம் ஆண்டுக்குரிய சந்தா மூலம் பெற்ற வருமானம் கணக்கிடுதல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| 2018ஆம் ஆண்டில் பெற்ற சந்தா | | 45,000 |
| கூட்டுக : 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா 2017 - ல் பெற்றது | 4,000 | |
| 2018 ஆம் ஆண்டிற்கான பெற வேண்டிய சந்தா | 5,000 | 9,000 |
| | | 54,000 |
| கழிக்க : 2017 - ல் பெற வேண்டிய சந்தா | 3,000 | |
| 2018 - ல் முன்கூட்டிப் பெற்ற சந்தா | 7,000 | 10,000 |
| 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெற்ற வருமானம் | | 44,000 |





## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. அ)

தொடக்க முதல் கணக்கிடுதல்

ராஜு என்பவரின் ஏடுகளில் 2018, ஜனவரி 1 ஆம் நாளைய நிலையறிக்கை

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | கைரொக்கம் | 80,000 |
| வங்கி கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,80,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | கடனாளிகள் | 90,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 2,50,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 5,20,000 | | 5,20,000 |

இறுதி முதல் கணக்கிடுதல்

ராஜு என்பவரின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,95,000 | கைரொக்கம் | 90,000 |
| வங்கி கடன் | 60,000 | சரக்கிருப்பு | 1,40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 45,000 | கடனாளிகள் | 2,00,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 3,00,000 | பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 |
| | 6,00,000 | | 6,00,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் | 3,00,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் ( 2,500 x 12 மாதங்கள் ) | 30,000 |
| | 3,30,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 50,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 2,80,000 |
| கழிக்க: தொடக்க முதல் | 2,50,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 30,000 |

( அல்லது )



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

41. ஆ) திருச்சி கல்வியியல் மன்றத்தின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்

ப | வ

| பெறுதல்கள் | தொகை ₹. | செலுத்தல்கள் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | முதலீடுகள் செய்தது | 80,000 |
| கைரொக்கம் | 20,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 3,000 |
| நன்கொடை பெற்றது | 80,000 | தணிக்கை கட்டணம் | 2,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 12,000 | பொதுச் செலவுகள் | 7,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| சந்தா | 10,000 | இருப்பு கீ/இ கைரொக்கம் | 34,000 |
| | 1,27,000 | | 1,27,000 |

42. அ) ப **பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 40,000 | ரொக்கக் க/கு (பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு) | 90,000 |
| பற்பல கடனாளிகள் க/கு ( மாற்றுச்சீட்டு பெற்றது- இருப்புக்கட்டும் தொகை ) | 90,000 | கடனாளிகள் க/கு ( மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது) | 10,000 |
| | | இருப்பு கீ/இ | 30,000 |
| | 1,30,000 | | 1,30,000 |

ப **மொத்த கடனாளி கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | 1,50,000 | ரொக்க க/கு ( பெற்றது ) | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ( மறுக்கப்பட்டது ) | 10,000 | விற்பனை திருப்ப க/கு | 40,000 |
| விற்பனை க/கு ( கடன் ) ( இருப்பு கட்டும் தொகை) | 4,90,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு க/கு ( மாற்றுச்சீட்டு பெற்றது ) | 90,000 |
| | | இருப்பு கீ/இ ( இறுதி இருப்பு) | 2,40,000 |
| | 12,50,000 | | 12,50,000 |

மொத்த விற்பனை = ரொக்க விற்பனை + கடன் விற்பனை

= ₹. 2,00,000 + ₹. 4,90,000 = ₹. 6,90,000





( அல்லது )

42. ஆ) **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 1 | வளாகம் க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு<br>( கட்டடத்தில் மதிப்பு உயர்த்துவது பதிவு செய்யப்பட்டது ) | | 60,000 | 60,000 |
| ,, | மறுமதிப்பீட்டு க/கு ப<br>சரக்கிருப்பு க/கு<br>அறைகலன் க/கு<br>இயந்திரம் க/கு<br>கொடுபடவேண்டிய பொறுப்பு க/கு<br>( இயந்திரம், அறைகலன், சரக்கிருப்பு மதிப்பு குறைப்பது மற்றும் கொடுபட வேண்டிய பொறுப்பு பதிவு செய்யப்பட்டது ) | | 10,000 | <br>5,000<br>2,000<br>2,500<br>500 |
| ,, | மறுமதிப்பீட்டு க/கு ப<br>ஹரி முதல் க/கு<br>மாதவன் முதல் க/கு<br>கேசவன் முதல் க/கு<br>( மறுமதிப்பீட்டு இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 50,000 | <br>25,000<br>15,000<br>10,000 |

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 5,000 | வளாகம் க/கு | | 60,000 |
| அறைகலன் க/கு | | 2,000 | | | |
| இயந்திரம் க/கு | | 2,500 | | | |
| கொடுபடவேண்டிய பொறுப்பு க/கு | | 500 | | | |
| மறுமதிப்பீட்டு இலாபம் | | | | | |
| ஹரி முதல் க/கு (50,000 x $^5/_{10}$) | 25,000 | | | | |
| மாதவன் முதல் க/கு ( 50,000 x $^3/_{10}$) | 15,000 | | | | |
| கேசவன் முதல் க/கு ( 50,000 x $^2/_{10}$) | 10,000 | 50,000 | | | |
| | | 60,000 | | | 60,000 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**43. அ)**

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 10,000 | கட்டடம் க/கு | | 28,000 |
| ஐயக்கடன் ஒதுக்கு க/கு | | 3,000 | | | |
| <u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> | | | | | |
| மஞ்சு முதல் க/கு (15,000 x $^{5}/_{10}$) | 7,500 | | | | |
| சாரு முதல் க/கு (15,000 x $^{3}/_{10}$) | 4,500 | | | | |
| லாவண்யா முதல் க/கு (15,000 x $^{2}/_{10}$) | 3,000 | 15,000 | | | |
| | | 28,000 | | | 28,000 |

ப **முதல் கணக்கு** வ

| விவரம் | மஞ்சு ₹ | சாரு ₹ | லாவண்யா ₹ | விவரம் | மஞ்சு ₹ | சாரு ₹ | லாவண்யா ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| மஞ்சு கடன் க/கு | 1,02,500 | - | -- | இருப்பு கீ/கொ | 70,000 | 70,000 | 70,000 |
| இருப்பு கீ/ இ | - | 89,500 | 83,000 | மறுமதிப்பீடு க/கு | 7,500 | 4,500 | 3,000 |
| | | | | இலாப நட்ட க/கு | 25,000 | 15,000 | 10,000 |
| | 1,02,500 | 89,500 | 83,000 | | 1,02,500 | 89,500 | 83,000 |
| | | | | இருப்பு கீ/கொ | - | 89,500 | 83,000 |

( அல்லது )

**43. ஆ) இரட்டைப்பதிவு முறை மற்றும் முழுமைபெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| அடைப்படை | இரட்டைப்பதிவு முறை | முழுமைபெறா பதிவேடுகள் |
|---|---|---|
| நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு ஆகிய இரு தன்மைகளும் பதிவு செய்யப் படுகின்றன | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவு தன்மைகள் முழுமையாகப் பதிவு செய்யப் படுவதில்லை |
| பராமரிக்கப்படும் கணக்கின் வகைகள் | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பராமரிக்கப் படுகின்றன. | ஆள்சார் மற்றும் ரொக்க கணக்குகள் மட்டும் முழுமையாகப் பராமரிக்கப் படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பராமரிக்கப்படுவதில்லை |
| இருப்பாய்வு தயாரித்தல் | கணக்கேடுகளில் பதிவு செய்த பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சோதித்துப் பார்க்க, இருப்பாய்வு தயாரிக்க முடியும் | கணக்குகள் முழுமையற்றதாக இருப்பதால், கணக்கேடுகளில் பதிவு செய்த பதிவுகளின் கணக்கீட்டுச் சரித்தன்மையை சோதித்துப் பார்க்க, இருப்பாய்வு தயாரிப்பது கடினம் |
| சரியான இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுதல் | சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய, வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. | முழுமையான தகவல்கள் பெற முடியாததால், வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு துல்லியமாக தயாரிக்க முடியாது. |
| நிதிநிலையினை கண்டறிதல் | உண்மையான நிதிநிலையினை தெரிந்துகொள்ள , இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க முடியும் | சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வெறும் மதிப்பீடுகள் மற்றும் முழுமையற்றதாக இருப்பதால், இருப்புநிலைக் குறிப்பு துல்லியமாக தயாரிக்க முடியாது |
| பொருந்தும் தன்மை | இது அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்தும் தன்மை கொண்டது | இது, சிறிய அளவிலான தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பொருந்தும் |
| நம்பகத்தன்மை | இது, அறிவியல் பூர்வமான கணக்கியல் முறை மற்றும் சில கணக்கியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மையுடையது | இது, அறிவியல் பூர்வமான தன்மையற்றதால், நம்பகத்தன்மை அற்றது |
| ஏற்புத் தன்மை | கணக்கியல் பதிவேடுகள், வரி அதிகாரிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையதாகும் | கணக்கியல் பதிவேடுகள், அனைத்து பயனாளர்களுக்கும் ஏற்புடையது அல்ல |





**44.ஆ)** <u>தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் ஏடுகளில் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும்</u>

ப <u>ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு</u> வ

| செலவுகள் | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|
| சம்பளம் | 20,000 | வட்டி பெற்றது | 5,000 |
| வாடகை | 24,000 | சந்தா | 55,000 |
| பயணச்செலவுகள் | 2,000 | நுழைவுக்கட்டணம் | 7,000 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 | | |
| அறைகலன் விற்பனை மீதான நட்டம் ( 17,000 - 16,000 ) | 1,000 | | |
| **உபரி** ( செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம் ) | 14,000 | | |
| | 67,000 | | 67,000 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

( அல்லது )

44. ஆ) **மறுமதிப்பீட்டுக் கணக்கு**

ப வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 5,000 | கட்டடம் க / கு | | 20,000 |
| வாராஜயக்கடன் ஒதுக்கு க/கு | | 3,000 | | | |
| <u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> | | | | | |
| அமல் முதல் க/கு ( 12,000 x $\frac{7}{12}$ ) | 7,000 | | | | |
| விமல் முதல் க/கு ( 12,000 x $\frac{5}{12}$ ) | 5,000 | 12,000 | | | |
| | | 20,000 | | | 20,000 |

ப **முதல் கணக்கு** வ

| விவரம் | அமல் ₹ | விமல் ₹ | நிர்மல் ₹ | விவரம் | அமல் ₹ | விமல் ₹ | நிர்மல் ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/ இ | 91,000 | 65,000 | 30,000 | இருப்பு கீ/கொ | 70,000 | 50,000 | -- |
| | | | | வங்கி க/கு | -- | -- | 30,000 |
| | | | | மறுமதிப்பீடு க/கு | 7,000 | 5,000 | -- |
| | | | | இலாப நட்ட க/கு | 14,000 | 10,000 | --- |
| | 91,000 | 65,000 | 30,000 | | 91,000 | 65,000 | 30,000 |
| | | | | இருப்பு கீ/கொ | 91,000 | 65,000 | 30,000 |

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.CBSEtips.in

45. அ)

<u>கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய</u>

ப <u>பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்</u> வ

| பெறுதல்கள் | தொகை (₹) | தொகை (₹) | செலுத்தல்கள் | தொகை (₹) |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ கைரொக்கம் | | 1,000 | இருப்பு கீ/கொ வங்கி மேல்வரைப்பற்று | 6,000 |
| <u>சந்தா பெற்றது</u>: | | | கூலி செலுத்தியது | 2,000 |
| முந்தைய ஆண்டு | 500 | | கடன் மீதான வட்டி செலுத்தியது | 2,000 |
| நடப்பு ஆண்டு | 9,600 | | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் | 700 |
| விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 5,200 | விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | 2,600 |
| உயில்கொடைப் பெற்றது | | 2,000 | விளையாட்டுப் பொருட்கள் வாங்கியது | 1,900 |
| அரங்கம் அமைப்பதற்காக பெற்ற நன்கொடை | | 2,000 | இருப்பு கீ/இ | |
| | | | ரொக்க இருப்பு | 300 |
| | | | வங்கி இருப்பு | 2,400 |
| | | 20,700 | | 20,700 |

( அல்லது )

45. ஆ) <u>சரிக்கட்டப்பட்ட இலாபங்கள்</u>

| விவரம் | 2016 ₹ | 2017 ₹ | 2018 ₹ |
|---|---|---|---|
| இலாபம் | 1,75,000 | 1,50,000 | 2,00,000 |
| <u>கழிக்க</u>: திரும்ப திரும்ப நிகழா வருமானம் | 45,000 | ---- | ---- |
| | 1,30,000 | 1,50,000 | 2,00,000 |
| <u>கழிக்க</u>: இறுதிச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | ---- | 30,000 | ---- |
| | 1,30,000 | 1,20,000 | 2,00,000 |
| <u>கூட்டுக</u> : தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | ---- | ---- | 30,000 |
| சரிகட்டப்பட்ட பின் இலாபம் | 1,30,000 | 1,20,000 | 2,30,000 |

சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

= $\frac{1,30,000+1,20,000+2,30,000}{3}$ = $\frac{4,80,000}{3}$ = ₹.1,60,000

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 1,60,000 x 4 = ₹.6,40,000

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

46. அ)

<u>குறிப்பேட்டுப் பதிவு</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018, டிசம்பர் 31 | முதல் மீதான வட்டி க/கு ப<br>ஆனந்த் முதல் க/கு<br>நாரயணன் முதல் க/கு<br>( முதல் மீதான வட்டி 6 % அனுமதிக்கப்பட்டது ) | | 4,800 | <br>3,000<br>1,800 |
| ,, | இலாப நட்டப் பகிர்வு க/கு ப<br>முதல் மீதான வட்டி க/கு<br>( முதல் மீதான வட்டி கணக்கு முடிக்கப்பட்டது ) | | 4,800 | <br>4,800 |
| ,, | ஆனந்த் முதல் க/கு ப<br>நாரயணன் முதல் க/கு ப<br>எடுப்புகள் மீதான வட்டி க/கு<br>( எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட்டது ) | | 1,000<br>800 | <br><br>1,800 |
| ,, | எடுப்புகள் மீதான வட்டி க/கு ப<br>இலாப நட்டப் பகிர்வு க/கு<br>( எடுப்புகள் மீதான வட்டி கணக்கு முடிக்கப்பட்டது ) | | 1,800 | <br>1,800 |
| ,, | இலாப நட்டப் பகிர்வு க/கு ப<br>ஆனந்த் முதல் க/கு<br>நாரயணன் முதல் க/கு<br>( இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 32,000 | <br>20,000<br>12,000 |

<u>2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்டப் பகிர்வு கணக்கு</u>

ப வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| <u>முதல் மீதான வட்டி கணக்கு</u> : | | | இலாப நட்ட க/கு | 35,000 |
| ஆனந்த் | | 3,000 | <u>எடுப்புகள் மீதான வட்டி கணக்கு</u> : | |
| நாராயணன் | | 1,800 | ஆனந்த் | 1,000 |
| <u>கூட்டாளிகளின் முதல் கணக்கு</u> : ( இலாபம் ) | | | நாராயணன் | 800 |
| ஆனந்த் ( 32,000 × $^5/_8$ ) | 20,000 | | | |
| நாராயணன் ( 32,000 × $^3/_8$ ) | 12,000 | 32,000 | | |
| | | 36,800 | | 36,800 |

( அல்லது )





46. ஆ) சராசரி இலாபம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$

$= \frac{30,000+32,000+35,000+37,000+40,000}{5} = \frac{1,74,000}{5} =$ ₹. 34,800

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| கூட்டாளிகளுக்கு உழைப்பூதியம் வழங்குவதற்கு முன் சராசரி இலாபம் | 34,800 |
| <u>கழிக்க</u>: கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் | 2,800 |
| **சராசரி இலாபம்** | 32,000 |

சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

= 1,20,000 × $\frac{20}{100}$ = ₹. 24,000

உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்

= 32,000 - 24,000

= ₹. 8,000

நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 8,000 × 5

= ₹. 40,000

47. அ)

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ | நாள் | விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்புகள் | 40,000 | 35,000 | | இருப்பு கீ/கொ | 2,00,000 | 1,75,000 |
| | எடுப்புகள் மீது வட்டி | 1,000 | 500 | | இலாப நட்ட பகிர்வு க/கு | 21,000 | 16,500 |
| | இருப்பு கீ/இ | 2,10,000 | 1,69,000 | | முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| | | | | | ஊதியம் | 18,000 | -- |
| | | | | | கழிவு | -- | 2,500 |
| | | 2.51,000 | 2,04,500 | | | 2.51,000 | 2,04,500 |
| | | | | | இருப்பு கீ/கொ | 2,10,000 | 1,69,000 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

( அல்லது )

47. ஆ) குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
| --- | --- | --- | --- | --- |
| 2017 ஏப்ரல் 1 | கட்டடம் க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு<br>( கட்டடத்தில் மதிப்பு உயர்த்துவது பதிவு செய்யப்பட்டது ) | | 30,000 | 30,000 |
| ” | மறுமதிப்பீட்டு க/கு ப<br>சரக்கிருப்பு க/கு<br>அறைகலன் க/கு<br>கொடுபடா பொறுப்பு க/கு<br>( சரக்கிருப்பு மதிப்பு குறைப்பது, அறைகலன் மீது தேய்மானம் நீக்கியது மற்றும் கொடுபடா பொறுப்பு பதிவு செய்யப்பட்டது ) | | 18,000 | 5,000<br>12,000<br>1,000 |
| ” | மறுமதிப்பீட்டு க/கு ப<br>ரோஜா முதல் க/கு<br>நீலா முதல் க/கு<br>கனகா முதல் க/கு<br>( மறுமதிப்பீட்டு இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 12,000 | 4,800<br>3,600<br>3,600 |

ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
| --- | --- | --- | --- | --- | --- |
| சரக்கிருப்பு க/கு | | 5,000 | கட்டடம் க/கு | | 30,000 |
| அறைகலன் க/கு | | 12,000 | | | |
| கொடுபடா பொறுப்பு க/கு | | 1,000 | | | |
| <u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> | | | | | |
| ரோஜா முதல் க/கு (12,000 x $^4/_{10}$) | 4,800 | | | | |
| நீலா முதல் க/கு (12,000 x $^3/_{10}$) | 3,600 | | | | |
| கனகா முதல் க/கு ( 12,000 x $^3/_{10}$) | 3,600 | 12,000 | | | |
| | | 30,000 | | | 30,000 |

B.BALAJI, GHSS , PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613